# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.No.25/2017

Deposition of RW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 10.01.2024.

Evidence Recorded Time: 03.36 P.M to 03.55 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ரவிக்குமார் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | முருகேசன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:–**

நான் மேல்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். விபத்து சமயத்தில் TN 52 T 2958 என்ற ஆம்புலன்ஸ் வண்டியை நான்தான் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். நான் சேலம் பக்கத்திலிருந்து தர்மபுரியை நோக்கி சென்று கொண்டிருந்தேன். விபத்து சமயத்தில் நான் மெயின் ரோட்டிலிருந்து இடது புறமாக திரும்பி சர்வீஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது சேலத்திலிருந்து தர்மபுரி நோக்கி வந்த இருசக்கர வாகனம் நான் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதியது. விபத்து சம்மந்தமாக என் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்து அனுப்பிவிட்டார்கள். அந்த வழக்கு தள்ளுபடி ஆனதாக சொன்னார்கள். அது எ.ம.சா.ஆ.1 ஆகும். விபத்திற்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர்தான் காரணம், நான் காரணமல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டு நான் அவர்கள் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ஆவணம் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் இருந்து கொடுக்கப்பட்டது என்றாலும், எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு பொருண்மை தவறு என்று முடிக்கப்பட்டது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட குற்றவியல்

நீதித்துறை நடுவர் அவர்களிடமிருந்து எந்த ஆவணத்தை பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் பொருண்மை தவறு காரணமாக இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் சாட்சிகளை விசாரணை செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி அதன் பிறகு நீதிமன்றம் சாட்சிகளுக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகே முடிக்கப்படும் என்றாலும், அதனால் என் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.1 எந்த வகையிலும் ஏற்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு நான் தான் முழு காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் முறையாக உள்ளதாலும், நானும், என் வாகனம் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட நிறுவனமும் கூட்டாகவோ, தனித்தனியாக இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.